# ஆய்வு: பொருளியல் நிலை, வேலைகளைவிட சுற்றுப்புறத்திற்கே முன்னுரிமை தர வேண்டும்

பொருளியல் வளர்ச்சி, வேலைகள் ஆகியவற்றுக்கு மேலான முன்னுரிமை சுற்றுப்புறத்திற்குத் தரப்பட வேண்டும் என்பதே சிங்கப்பூர்வாசிகளில் பெரும்பாலானோரின் கருத்தாகும். பொருளியல் வளர்ச்சி மெதுவடைவது, வேலைகள் குறைந்து வருவது ஆகியவற்றைவிட சுற்றுப்புறப் பாதுகாப்பே முன்னுரிமை பெற வேண்டும் என்று மக்களிடையே கொள்கை ஆய்வுக் கழகம் மேற்கொண்ட கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

நவம்பர் 2019ஆம் ஆண்டுக்கும் மார்ச் 2020ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நடத்தப்பட்ட இக்கணக்கெடுப்பில் ஐந்தில் மூவர், இவ்வாறு சுற்றுப்புறத்திற்கு முன்னுரிமை வேண்டும் என்றனர்.

சுற்றுப்புறம் பாதிக்கப்பட்டாலும் பொருளியல் வளர்ச்சி, வேலை உருவாக்கம் ஆகியவையே முக்கியம் என்பது மறு சாராரின் கருத்தாகும். சுற்றுப்புறப் பாதுகாப்பு, பொருளியல் தொடர்பான சிங்கப்பூரின் கருத்துகள் மலேசியா, தைவான், பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் ஒத்திருந்தது.

இதற்கு முன்னதாக 2002ஆம் ஆண்டிலும் 2012ஆம் ஆண்டிலும் இதே கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இம்முறை கணக்கெடுப்பில் 2,012 சிங்கப்பூர்வாசிகள் பங்கேற்றனர். இவர்களில் சுற்றுப்புறப் பாதுகாப்பு முன்னுரிமை பெற வேண்டும் என்று கூறிய பெரும்பாலானோர் இளையர், கல்வித் தகுதி அதிகமுள்ளோர், அதிக வருமானம் பெறுவோர் ஆவர்.

குறைந்த வருமானம் ஈட்டுவோர் தங்களின் வாழ்வாதாரங்களைக் கருத்தில் கொண்டு வேலைகளும் பொருளியலுமே முன்னுரிமை பெற வேண்டும் என்று முடிவெடுத்திருக்கலாம் என்றனர் கழகத்தின் ஆய்வுக்குழுவினர்.

கணக்கெடுப்பில் வேலைக்கே முதலிடம் என்று 40% சிங்கப்பூரர்கள் தெரிவித்தனர். குடும்பம், நண்பர்கள், சொத்து, ஓய்வு நேரம் ஆகிய அம்சங்களுக்குப் பின்னரே 'வேலை' என்றனர். 2002ஆம் ஆண்டில் இரண்டாம் இடத்தில் 'வேலை' இடம்பெற்றது. குறைவான வேலைகள் உள்ள சூழலில் இங்கு குடியேறியவர்களைக் காட்டிலும் சிங்கப்பூரர்களுக்கே அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று ஐந்தில் நான்கு சிங்கப்பூர்வாசிகள் கூறியிருந்தனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.